## 2. இசையோடு தேவ செய்தி

அமெரிக்கன் கல்லூரி பட்டதாரியான இவர், மத்திய அரசு அதிகாரியாக 25 ஆண்டுகள் பணியாற்றினார். 1947 இல்.ஃ.பிரீடா பத்மினியை தம் இல்லத்தரசியாக மணந்து கொண்டார். இவர்கட்கு மல்லிகா, தேவிகா, உமா, மாலா, கல்பனா, காஞ்சனா என ஆறு பெண்மக்களை ஆண்டவர் ஆசீர்வாதமாகக் கொடுத்தார். அன்னாரை இறை பக்தியிலும், இசைப்பற்றிலும் வேரூன்றச் செய்தனர் பெற்றோர்.

சென்னை வானொலி நிலையத்தில் வானொலி ஆசிரியராகவும், செய்தி ஆசிரியராகவும் பணியாற்றிய போது, இசை வழியே இறைப்பணியும் செய்து வந்தார். தமிழகத்தில் தென்னந்திய திருச்சபை (C.S.I.) லுத்தரன் திருச்சபை, இந்திய சுவிசேஷ திருச்சபை ஆகிய திருச்சபைகளைச் சேர்ந்த பல ஆலயங்களிலும் இசையோடு தேவசெய்தி வழங்குவார். இசை நயம், இலக்கிய வளம் செறிந்த கதா காலட்சேபங்களை இவர் பக்திப்பரவசத்துடன் நிகழ்த்தும் போது கல்மனமும் கரையும், வானொலி நிலையத்தின் தேர்வுத்தகுதி (Audioned Voice) பெற்றவர் இவர். வானொலி மூலம் இவர் நிகழ்த்திய கதாகாலட்சேபங்களைக் கேட்டும் புறமதத்தவர் அநேகர் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொண்டனர். தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் இயற்றிய பெத்லகேம் குறவஞ்சி, ஞான நொண்டி நாடகம், வீரமா முனிவரின் தேம்பாவணி, எ.ஆ., கிருஷ்ண பிள்ளை இயற்றிய இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய தேவாரம் போன்ற படைப்புகளிலிருந்து பாடல்களைத் தேர்ந்தெடுத்து, இசையமைத்து, ஒரு மணி நேர இசைச் சித்திரங்களாக வானொலி மூலம் அநேகர் கேட்க வழி வகுத்தார் மற்றும் தென்னிந்திய திருச்சபையின் திருவிருந்து ஆராதனை முறைக்குக் கர்நாடக இசைமுறையில் இவர் இசை அமைத்ததை, கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தார் (CLS) 1970ஆம் ஆண்டு ஒரு நூலாக வெளியிட்டார்கள். இவரது மருமகன், திரு.டி.ஏ.ஜி.துரைப்பாண்டியன் இதற்கு ஐரோப்பிய ஸ்வரக்குறிப்பு (notation) எழுதியுள்ளார்.

### கர்நாடக இசையில் கீர்த்தனைகள்

தொன்று தொட்டு, பரம்பரை பரம்பரையாக நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள இசைச் செல்வத்தின் சிறப்பினை உணர்ந்து, கிறிஸ்தவ சமுதாயம் கடவுளைப் போற்றுவதற்கும், அவரது நற்செய்தியை அறிவிப்பதற்கும் கர்நாடக இசையில் அமைக்கப்பட்ட கீர்த்தனைகளைப் பயன்படுத்த வேண்டுமென்பது இவரது பேராவல். இவர் சங்கராபரணம், காம்போதி,

கல்யாணி, சிந்து பைரவி, காப்பி, கானடா, சஹானா, ஹிந்தோளம், பாகேஸ்வரி, மாயாமாளவகௌளை, தன்யாசி, ஜோன்புரி, கம்பீரநாட்டை, வசந்தா, ஹம்சத்வனி, ஆனந்த பைரவி, தேஷ், சுபபந்துவராளி போன்ற பற்பல இராகங்களில் நூற்றுக்கணக்கான கீர்த்தனைகளுக்கு இனிய இசையமைத்துள்ளார். கவிநயம், பொருள் நயம் செறிந்த கீர்த்தனைகளை கர்நாடக இசையில், குழைவோடும், கெம்பீரத்தோடும் இவர் பாடும் போது, கேட்போரின் உள்ளம் உருகும்.

**இசைத்தட்டுகள்**

HMV நிறுவனமும், கொலம்பியா நிறுவனமும் இவர் பாடிய பாடல்கள் அடங்கிய 18 இசைத்தட்டுகளை வெளியிட்டுள்ளன. CLS நிறுவனம் இவர் இசையமைத்துப் பாடிய, ‘இசைப் பாடல் பல பாடியே’ ‘இரட்சணிய தேவாரம்’ எனும் ஒலி நாடாக்களை வெளியிட்டுள்ளது. திருச்சி ‘கலைக்காவிரி’ நிலையத்தின் ‘புதுராக சந்தங்கள்’ எனும் ஒலி நாடாவுக்கு தாம் கண்டுபிடித்த புதிய ராகங்களில் இசையமைத்தும், பாடியும் உள்ளார். மிகவும் ஊழிய பாரம் கொண்ட இவர், நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் ஆலயக் கட்டுமானப் பணிக்காக, தம் சொந்த செலவில் ‘ஆலயத்திருப்பணிப் பாடல்கள்’ எனும் ஒலி நாடாவை வெளியிட்டு, குஜராத்தில் ஆலயம் கட்ட ரூ.35,000 நிதி திரட்டித் தந்தார்.

**ஆராய்ச்சிப் புத்தகங்கள்**

அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் இசைப்பேராசிரியராகவும், இசைத் துறைத் தலைவராகவும் 1983 முதல் 1991 வரை பணியாற்றினார். இக்குறுகிய காலத்தில் கீழ்கண்ட இசை ஆராய்ச்சிப் புத்தகங்களை எழுதினார்.

1. புதிய - இராகங்கள்
2. நுண்ணலகுகளும் - இராகங்களும்
3. புல்லாங்குழல் - ஓர் ஆய்வு
4. இசைத்தமிழ் வரலாறு – பகுதி1, பகுதி 2, பகுதி 3.

இவற்றுள் ‘நுண்ணலகுகளும் இராகங்களும்’ எனும் புத்தகம் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. இவை தவிர வேறு பல புத்தகங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

**அவற்றுள் சில**

1. ஜெப ஜீவியம்
2. இசை வளர்த்த கிறிஸ்தவப் பெரியார்கள்
3. இசை வழி இறை பணி
4. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர்

**புதிய இராகங்கள்**

இவர் உருவாக்கிய புதிய இராகங்கள் 32.

| | | | |
|---|---|---|---|
| 1. | கரமஞ்சரி | 17. | தீர இந்தோளம் |
| 2. | பூர்ணசாவேரி | 18. | தேவநாட்டை |
| 3. | பூர்வதன்யாசி | 19. | காஞ்சன பௌளி |
| 4. | சுந்தர மனோகரி | 20. | குமுத சந்திரிகா |
| 5. | கனக தோடி | 21. | கான ஏமவதி |
| 6. | கானமுகாரி | 22. | பொன்னி |
| 7. | நாதரஞ்சனி | 23. | பத்ம கல்யாணி |
| 8. | நவரசமாலா | 24. | விஜய மாளவி |
| 9. | வசந்ததோடி | 25. | ஜெய சூடாமணி |
| 10. | ஞான சிந்தாமணி | 26. | ரத்ன சாரங்கா |
| 11. | வசந்தமல்லி | 27. | சித்திரைச் சிந்து |
| 12. | கல்பனதாரினி | 28. | தீபவராளி |
| 13. | அமுதசுரபி | 29. | தவப்பிரியா |
| 14. | மாளவக்குறிஞ்சி | 30. | மரகத கௌளை |
| 15. | லலித பைரவி | 31. | திலக மந்தாரி |
| 16. | அமுத காந்தாரி | 32. | ஈசதரங்கினி |

தமது மனைவி, மக்களின் பெயர்களை சில இராகங்களுக்கு இட்டுள்ளார்!

**பாராட்டுகளும், பட்டங்களும்**

இவரது இசை ஆராய்ச்சியைப் பாராட்டி 1990ம் ஆண்டு தமிழக அரசு இவருக்கு 'கலைமாமணி' எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்தது. மேலும் அருட்கலைஞர், இசைக் கதைச் செல்வர், இன்னிசைச் செம்மல் போன்ற பல பட்டங்களையும், கிறிஸ்தவ சமுதாயம் இவருக்கு வழங்கி மகிழ்ந்தது. இவர் பல கருத்தரங்களில் கலந்து கொண்டு இசைச் சொற்பொழிவு ஆராய்ச்சிக் கட்டுரைகள் அளித்துள்ளார். இறையியல் கல்லூரிகளிலும், கிறிஸ்தவக் கலை தொடர்பு நிலையங்களிலும் விளக்கவுரைகள் அருளியுள்ளார்.

**கர்நாடக இசைப்பயிற்சி நூல்**

கிறிஸ்தவ நெறி பிறழாமல், கர்நாடக சங்கீதம் பயில மிகச் சிறந்த வழியமைத்துள்ளார். நோயால் உடல் நலிவுற்ற நேரத்திலும், விடாமுயற்சியுடன் கர்நாடக இசைப் பயிற்சி எனும் நூலை, கிறிஸ்தவ சமுதாயத்திற்காக எழுதினார். இந்நூலில் உள்ள இசைப்பயிற்சிகளைப்பாடி இசைத்தட்டில் வெளியிட்டுள்ளார். இந்நூலையும், இசைத்தட்டையும் கொண்டு ஒருவர் வீட்டிலிருந்தே கர்நாடக சங்கீதம் பயிலலாம். இந்நூலில் உள்ள பாடல்கள் யாவும் இயேசு கிறிஸ்துவைப் போற்றி எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

**கிறிஸ்தவ சாட்சி**

எத்தனையோ அரிய சாதனைகள் புரிந்திருந்தாலும் மிகுந்த தாழ்மையுடன் காணப்படுவார். இனிய சுபாவமும், இளகிய உள்ளமும் படைத்தவர். 'பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள்' என்ற பரம அழைப்பை சிர மேற்கொண்டு, ஓய்வு ஒழிவில்லாமல் இசைவழி இறைபணி செய்த இவ்வடியாரின் வாழ்க்கை நமக்கு ஒரு சவாலாகும். அன்னாரின் கிறிஸ்தவ சாட்சிக்காய் இயேசுவைத் துதிப்போம்.

எழுதியவர்

**திருமதி.உமா செல்லப்பா**